2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலை என்பது கைத்தறித் துறை தொடர்புடையது. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது. இதுபோல் தொழில் நடத்துவதற்கு தொழில் முனைவோர்கள் முன்வந்தால் நம்முடைய துறையின் சார்பில் மூன்று விதமான கடன் வழங்கும் திட்டங்கள் இருக்கின்றன. தொழில் முனையக்கூடிய அந்தத் தொழில் முனைவோர்களுக்கு துறையின் சார்பில் கடன் வழங்கி, தொழில் துவங்குவதற்கான ஆலோசனைகள் வழங்கி, உற்பத்தி செய்து, விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு எல்லா பணிகளையும் நம்முடைய அரசு செய்து தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நம்முடைய சிதம்பரம் தொகுதியில் மட்டும் இத்துறையின் மூலமாக 3 சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 72 நபர்களுக்கு ரூ.1 கோடியே 27 இலட்சம் மானியத்துடன் ரூ.3 கோடியே 94 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 501 நபர்களுக்கு இரண்டு வருடத்தில் ரூ.11 கோடியே 87 இலட்சம் மானியத்துடன் ரூ.37 கோடியே 3 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், தொழில் துவங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் யார் வந்தாலும் அரசு உதவி செய்து தொழில் துவங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம்

***51661—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், போலகம் ஊராட்சி, மேலப்போலகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், போலகம் ஊராட்சி, மேலப்போலகத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.11.62 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நாகப்பட்டினம், மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் தொகுதியில் இதுவரை இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 13 அங்கன்வாடி மையங்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றன. 6 பள்ளிக்கூடங்களுக்கு 2 வகுப்பறைக் கட்டடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுபோல நிறைய திட்டங்கள் செய்திருக்கிறோம். இப்போது நாகப்பட்டினத்தில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட நிருவாகம் சார்பில் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி விரைந்து கட்டித்தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்– மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய*

2023 ஏப்ரல் 11]

உத்தரவுப்படி படிப்படியாக எல்லா இடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைப்படி, நாகப்பட்டினம் மாவட்டத்திலும் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிட இந்த அரசு முயற்சி செய்யும், உறுதியாகக் கட்டித் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் பணியில் மகளிர் இணைந்ததனுடைய பொன் விழாவை முன்னிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். அதில் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் மகளிர் ஓய்வறை அமைக்கப்படும் என்கிற ஒரு முக்கியமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மகளிர் ஓய்வறை என்பது எல்லா இடங்களிலும் தேவைப்படுகிறது. குறிப்பாக, பள்ளிகளில், கல்லூரிகளில் தேவைப்படுகிறது. எனவே, மகளிர் ஓய்வறைத் திட்டத்தை, அனைத்து மட்டங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடிய எண்ணம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. இது காவல் துறை சம்பந்தப்பட்டது, அதுமட்டுமில்லாமல், தொடர்ச்சியாக மகளிர் நலனுக்காக, எங்கெங்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன; அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதிலே இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதற்காக அவர்களுடைய பிரச்சினைகளை அறிவதற்காகத்தான், தனியாக மாநில மகளிர் கொள்கையும் வகுத்து அது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி,*

நிரந்தரப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்காடு தொகுதி, அயோத்திப்பட்டினம் ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சி, மேட்டுப்பட்டியில் புதிதாக அங்கன்வாடிக் கட்டடம் அமைக்கப்படுமா என அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேட்டுப்பட்டி ஊராட்சி, மேட்டுப்பட்டி கிராமத்திலுள்ள அங்கன்வாடி கட்டடத்தைப் பற்றி கேட்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறையின்மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த மேட்டுப்பட்டி ஊராட்சியில் கட்டடம் கட்ட உறுதியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

புதைமின் வடங்கள்

***51519—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகரத்தில் தேரோடும் வீதிகளின் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைமின்வடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS